**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு மா.சந்திரமோகன்., பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் ஆவணி திங்கள் 18–ம் நாள்
2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03–ம் நாள் புதன்கிழமை

******

**இடைமனு எண். 04/2025–ல் – அசல் வழக்கு எண். 178/2017**

1. பானுமதி
2.சிங்காரவேலு
3. மாலினி
4. மலர்விழி .....மனுதாரர்/பிரதிவாதிகள்

**...எதிராக...**

1. விஜயலெட்சுமி
2. லதா .... எதிர்மனுதாரர்கள்/ வாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 25.08.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு S.சுந்தரய்யா அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. கார்த்திக்ராஜன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் இருந்த காலதாமதத்தை மன்னித்து அவற்றை ஏற்றுக்கொள்ள உத்தரவிடக்கோரி மனுதாரர்களால் இம்மனு உ.வி.மு.ச. கட்டளை–8 விதி 1 A (3) –ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.09.03 16:26:32 +0530

**1. மனுவின் சுருக்கம்**

(i) இந்த மனுவின் 1–ம் மனுதாரர் அசல் வழக்கில் 1–ம் பிரதிவாதி ஆவார். மற்ற பிரதிவாதிகளுக்காகவும் 1–ம் மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் எதிர்மனுதாரர்கள்/வாதிகள், மனுதாரர்கள் மீது பாகபிரிவினை, விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து மனுதாரர்கள் தரப்பு விசாரணைக்காக கெடு போடப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர்கள் தரப்பில் இறந்த ரவிச்சந்திரனின் வாரிசுகள் 1–ம் மனுதாரர் மற்றும் ரவிச்சந்தரனின் தாயார் தான் என கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மயிலாடுதுறையில் விளம்புகை செய்யப்பட்ட நகல் தற்போது தான் மனுதாரருக்கு கிடைக்கப்பெற்றது.

(ii) மேற்படி ஆவணம் இறந்த ரவிச்சந்திரன் வாரிசு 1–ம் மனுதாரர்தான் என நிரூபிக்க முக்கியமான ஆவணமாகும். அவற்றை குறியீடு செய்யவில்லையென்றால் மனுதாரர்களுக்கு ஏராளமான கஷ்டமும் நஷ்டமும் ஏற்படக்கூடும். வேண்டுமென்றோ அலட்சியமாகவோ முன்பே அவற்றை தாக்கல் செய்யாமல் இருக்கவில்லை. எனவே மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் இருந்த காலதாமதத்தை மன்னித்து அவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு மனுதாரரால் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

**2. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்.**

(i) மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படியும், நியாயப்படியும் சரியல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது. இந்த கவுண்டரில் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மனுதாரர் மனுவுடன் தாக்கல் செய்துள்ள அபிடவிட்டில் கண்ட பிற சங்கதிகளை வன்மையாக எதிர்மனுதாரர்கள்/வாதிகள் மறுக்கின்றார்கள். அதனை நிரூபிக்க மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.09.03 16:26:40 +0530

கடமைப்பட்டுள்ளார்கள். எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி (D.W.1) முழுமையாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டு உள்ளது. இந்த நிலையில் மீண்டும் ஆவணங்கள் இருப்பதாக கூறி DW.1–ஐ Recall செய்ய மனுதாரர்கள் மனு தாக்கல் செய்திருப்பது சரியல்ல.

(ii) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் குறித்து DW.1–டம் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ள நிலையில் அதில் ஏற்பட்டுள்ள இடைவெளிகளை பூர்த்தி செய்யும் நோக்குடன் மனுதாரர்கள் DW.1–ஐ Re–call செய்ய மனு தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரர்களுக்கு ஆவணங்களை தாக்கல் செய்ய போதிய காலக் வாய்ப்புகளும், வசதிகளும் வழங்கப்பட்டுள்ள போது அந்த கட்டத்தில் ஆவணங்களை தாக்கல் செய்யாமல் வேண்டுமென்றே இருந்து விட்டு, தற்பொழுது ஆவணம் கிடைத்து விட்டதாகவும், அதனை குறியீடு செய்ய வேண்டும் என்றும் கோரி DW.1–ஐ Recall செய்ய மனு தாக்கல் செய்திருப்பது வழக்கை காலம் கடத்தும் நோக்கில் தாக்கல் செய்யப்பட்ட மனு ஆகும். எனவே இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**3.** இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா ?**

**5. <u>தீர்வு:</u>**

(i) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/வாதிகளால், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது பாகபிரிவினை, விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்து, மனுதாரர்கள் தரப்பு

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.09.03 16:26:47 +0530

விசாரணைக்காக கெடு போடப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் இறந்த ரவிச்சந்திரனின் வாரிசுகள் 1–ம் மனுதாரர் மற்றும் ரவிச்சந்தரனின் தாயார் தான் என கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மயிலாடுதுறையில் விளம்புகை செய்யப்பட்ட நகல் தற்போது தான் மனுதாரர்களுக்கு கிடைக்கப்பெற்றது என்றும், மேற்படி ஆவணம் இறந்த ரவிச்சந்திரன் வாரிசு 1–ம் மனுதாரர்தான் என நிரூபிக்க முக்கியமான ஆவணமாகும் என்றும், எனவே மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் இருந்த காலதாமதத்தை மன்னித்து அவற்றை ஏற்றுக்கொள்ள உத்தரவிட வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

(ii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி (D.W.1) முழுமையாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டுவிட்டது என்றும், மனுதாரர்களுக்கு ஆவணங்களை தாக்கல் செய்ய போதிய காலக் வாய்ப்புகளும், வசதிகளும் வழங்கப்பட்டுள்ள போது அந்த கட்டத்தில் ஆவணங்களை தாக்கல் செய்யாமல் இருந்து விட்டு, தற்பொழுது மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டும் என்றும் கோரி மனு தாக்கல் செய்திருப்பது வழக்கை காலம் கடத்தும் நோக்கத்திற்காகத்தான் என்றும், எனவே இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் வாதம் செய்யப்பட்டது.

(iii) மனுதாரர் தரப்பில் மனுவில் கூறியுள்ள காரணங்கள் நியாயமானதாகவும், ஏற்றுக்கொள்ள கூடியதாகவும் உள்ளது. மேலும் இம்மனுவை அனுமதிப்பதால் வழக்கின் விசாரணை எந்தவிதத்திலும் பாதிக்கப்படபோவதும் இல்லை, எதிர்மனுதாரர்களுக்கும் எவ்விதமான பாதிப்பும் ஏற்படபோவதில்லை. மேலும் மேற்கண்ட ஆவணங்களை பொறுத்தவரையில் எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு, மனுதாரர்கள்/வாதிகளை மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு இருப்பதாலும், இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதாலும் தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின்

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.09.03 16:26:58 +0530

நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று கருதி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.09.03 16:27:05 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**பின் இணைப்பு**

| | |
|---|---|
| மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |
| எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம் | – இல்லை – |

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.09.03 16:27:09 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**நேரிய/வரைவு உத்தரவு**
இடைமனு எண்.04/2025–ல்
அசல் வழக்கு எண்.178/2017
நாள்.03.09.2025.